# DEPOSITION OF WITNESS
## (Chapter XX III Code of Civil Procedure)
## IN THE COURT OF SUBORDINATE JUDGE, KEERANUR
## CASE NO. OS.No.238 /2022
## Deposition of witness for defendant - D.W.1 (அப்துல்லா ராவுத்தர்)
## 13.12.2022

**சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

எனது மாமியார் பெயர் பசலியா ஆகும். எனது மாமியார் பெயரில் வெட்டிக்காடு சர்வே எண்ணில் 3/4 ஏக்கர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் இல்லை. எனது மாமியார் கிரையம் பெற்ற சொத்து எனக்கு தெரியும். சாட்சி தற்போது எனது மாமியார் சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றும் அவருடைய தகப்பனார் சொத்துத்தான் அவைகள் என்று சாட்சியம் அளிக்கிறார். பசலியா பெயரில் கிரையம் வாங்கிய சொத்துதான் என்றும் கிரையம் வாங்கவில்லை என பொய்யாக சொல்கிறேன்என்றால் சரியல்ல. அந்த சொத்தானது முஸ்தப்பா என்பவர் IP மனு தாக்கல் செய்ததில் ஏலம் விடப்பட்ட சொத்து என்றும் அதை என் மாமியார் கிரையம் பெற்றார் என்றும் அவைகள்தெரிந்தும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.எனது மனைவிக்கு எனது மாமியார் தானம் கொடுத்த சொத்தில் புல எண்.247/3D86 ஏர்ஸ் அடங்கும் என்றால் சரிதான். அந்த சொத்து முஸ்தப்பா IP மூலம் ஏலம் விடப்பட்ட சொத்தில் அடங்கும் என்றால் இல்லை. அந்த சொத்து எனது மாமியாருக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் அது முகமது இப்ராகிமின் பூர்வீக சொத்து ஆகும். அது பூர்வீக சொத்து இல்லை என்றும் IP ஏலம் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்து என சொன்னால் சரியல்ல. புல எண்.247/3D வாதி கிரையம் பெற்ற சொத்தில் அடங்கம் என்றும் அது எனது மாமியாருக்கு சொந்தமான சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் எனக்கு ஒரு வீடு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த சொத்து எனது அண்ணனுக்கு எவ்வாறு சொந்தம் என்றால் அந்த சொத்தை அண்ணாமலை செட்டியார் என்பவரிடம் இருந்து என் அண்ணன் கிரையம் பெற்றுள்ளார். அண்ணாமலை செட்டியாரும் IP மூலம் ஏலம் வந்த சொத்தைதான் கிரையம் பெற்றுள்ளார் என்றும் நான் IP நடவடிக்கையே இல்லை என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் அண்ணாமலையிடம் கிரையம் பெற்ற சொத்தும், எனது மாமியார் கிரையம் பெற்றுள்ள 3/4 ஏக்கர் சொத்தும், IP நடவடிக்கை மூலம் கிரையம் பெற்றது என்றால் சரியல்ல. புலஎண்.247/3D யை வாதி 1986 லேயே கிரையம் பெற்று அனுபவம் செய்துவருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதி 1986 லியே கிரையம் பெற்ற விபரம் தெரிந்து எனது மாமியார் தான பத்திரம் தயார்செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவியின்தம்பி மனைவியின் பெயரும் பசலியா என்றால் சரிதான். சுல்தான் முகமது மனைவி பசலியாவிற்கு சுல்தான் முகமது சொத்தில் பாகம் உண்டா என்றால் 1/4 பாகம் உண்டு. முகமது இப்ராகிம் சொத்திலும் மேற்கண்டபசலியாவிற்கு பாகம் உண்டு என்றால் சரிதான். எனது மாமியார்எனது மனைவிக்கு எழுதிவைத்த தான பத்திரத்தில் சுல்தான் முகமது மனைவிபசலியாவிற்கு பாகம் கொடுத்தாக

கண்டுள்ளதா என்றால் கொடுத்தாக இல்லை கொடுக்கவேண்டும் என்று உள்ளது. தாவா சொத்திற்கான பட்டா சுல்தான் முகமது மனைவி பசலியா பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு மாற்றிஉள்ளார். வழக்கிற்கு முன்பே பட்டா அவர் பெயரில் உள்ளது என்றும் நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1986ல் வாதி சொத்தை கிரையம் பெற்றதிலிருந்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த காலம் வரையான காலத்தில் நான் தாவா சொத்து குறித்து ஏதேனும் நடவடிக்கை எடுத்து அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து என்ன வடிவத்தில் உள்ளது என்றால் செவ்வகவடிவத்தில் உள்ளது.அதுபோல் வடிவத்தில் இல்லை என்றும் தாவா சொத்திற்கு நான் சென்றதே கிடையாது என்றும் அதனால் எனக்கு அது குறித்து தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு தென்புறத்தில் ரெங்கநாதர் கோவில் உள்ளது என்றால் எனக்கு தெரிந்து இல்லை. கருப்பர் கோவில் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் அளந்து பார்த்தார் அதன் வடிவமும் அதற்கு பக்கத்தில் உள்ள வடிவமும் தெரியவரும் என்றால் சரிதான். சுல்தான் முகமது மனைவி பசலியா தாவா புலஎண் சொத்தின் ஒரு பகுதியை அன்னவாசல் பேரூராட்சிக்கு எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது குறித்து வழக்கு போட்டுள்ளேன். அந்த வழக்கு எண் என்னவென்றால் எண் தெரியாது. வாதி தாவா சொத்தை ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்து கிரையம் பெற்றுள்ளார் என்றும் நான் பட்டாவை மட்டும் வைத்துக்கொண்டு கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது மாமியார் இனாம்செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்துக்களின் முழு விஸ்தீரணத்தையும் செட்டில்மெண்ட் செய்துகொடுக்க அவருக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. புல எண்.247/3D எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் நான் பொய்யாக கட்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதுபோல் எனது மாமியாருக்கு இனாம்செட்டில்மெண்ட் எழுதி வைக்க தாவா சொத்தை பொறுத்து எந்த உரிமையும் இல்லை என்றும் அதன் மூலம் எங்களுக்கு எந்த உரிமையும் கிட்டிக்காது என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து என்றும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(இரண்டாம் பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.)